பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 04 வெள்ளிக்கிழமை 20.08.2021 கதிர் 154

வவுனியா மாவட்டத்தில்

## மேலும் 145 பேருக்கு கொரோனா தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 145 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். ☞2

## கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 284 பேர் சிக்கினார்கள்

கொரோனாவைக் கட்டுப் படுத்தும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 284 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நாளில் இருந்து இதுவரை அந்தச் சட் டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் 55 ஆயிரத்து 656 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## குடாநாட்டில் மேலும் ஐவரை காவுகொண்டது கொரோனா

யாழ்ப்பாணத்தில் மேலும் 5 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மானிப்பாய் சுதுமலை வடக்கைச் சேர்ந்த 92 வயதுடைய ஆண் ஒருவரும், கைதடியைச் சேர்ந்த 43 ☞2

# நாடு முழுவதும் இன்று இரவு முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்

### ஒகஸ்ட் 31 அதிகாலை வரை தொடரும் என்கிறார் கெஹலிய

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவுக்கிணங்க நாடு முழுவதும் இன்று இரவுமுதல் 10 நாள்களுக்குத் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று இரவு 10 மணி முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையில் இந்த ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில் சுகாதாரம், ஆடைத்தொழிற்சாலை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை நடத்திச் செல்வதற்கு எந்தத் தடையும் கிடையாது என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்தியநிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். ☞2





## ஜனாதிபதி இன்று இரவு நாட்டு மக்களுக்கு உரை

இலங்கை முழுவதும் இன்று இரவு முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலாகவுள்ள நிலையில் அது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றவுள்ளார்.

இன்று இரவு 8.30 மணிக்கு அவர் உரையாற்றவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டை முடக்குவதற்கான காரணம், நாட்டில் தற்போதுள்ள கொரோனா நிலவரம், மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார ஒழுங்குவிதிகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அவர் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இன்று பகல் நடைபெற்ற கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் நாட்டை இன்று இரவு முதல் 10 நாள்களுக்கு ☞2

## மகாநாயக்க தேரர்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்தே முடக்கப்படுகின்றது நாடு

### ஜனாதிபதி தெரிவித்தார் என்கிறார் சன்ன ஜயசுமன



நாட்டை முடக்குமாறு மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் முன்வைத்த கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்தினார். அந்த வேண்டுகோளுக்கு மதிப்பளித்தே 10 நாள்களுக்கு நாட்டை முடக்கும் தீர்மானத்துக்கு ஜனாதிபதி வந்தார்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று பகல் நடைபெற்ற கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் ☞2

## திருமண விழாவில் பங்கேற்றவர்களுக்கு பி.சி.ஆர். சோதனை

யாழ்., நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பிரம்படி வீதியிலுள்ள வீடொன்றில் நடைபெற்ற திருமண விழா ☞2

## வவுனியாவில் மூன்று பெண்கள் கொரோனாத் தொற்றால் மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று மாத்திரம் 3 பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

வவுனியா, பம்பைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் சேர்க்கப்பட்டிருந்த பெண் ஒருவர் கொரோனாத் தொற்றால் மரணமடைந்துள்ளார்.

அத்துடன் பெரியார் ☞2

## குற்றவியல் மன்றுக்குப் பாரப்படுத்தும் தீர்மானத்துக்கு யாழ். மாநகரசபையில் ஈ.பி.டி.பியும் ஆதரவு அளித்தது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக.21

இலங்கையின் இனப்படுகொலை தொடர்பான விடயத்தை எதிர்வரும் ஐ.நா. கூட்டத்தொடரில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை வேண்டும் என்ற கோரும் தீர்மானம் ஒன்று யாழ் மாநகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய மூன்றினதும் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

2021.08.20 ஆம் திகதிய (நேற்றிய) மாதாந்த கூட்டத்தின் தொடர் இன்றைய தினம் பிற்பகல் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றபோது சபை நிறைவின்போது விசேட தீர்மானமாக இது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ☞2

## யாழில் மக்கள் முண்டியடிப்பு



(இ.கலையமுதன்)

நாடு முடக்கப்படவுள்ளது என அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில் யாழ்ப்பாணம் மாவட் ☞2

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



## மேலும்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில இன்று வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக, மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில், 145 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுயதனிமைப் படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## குடாநாட்டில்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதுடைய ஆண் ஒருவரும், மானிப்பாயைச் சேர்ந்த 85 வயதுடைய ஆண் ஒருவரும், உரும்பிராயைச் சேர்ந்த 86 வயதுடைய ஆண் ஒருவரும், அளவெட்டியைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவருமே நேற்று உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 192ஆக உயர்வடைந்துள்ளது.

## நாடு...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இந்தக் காலப்பகுதியில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு அவர்களின் வீடுகளுக்கே சென்று தடுப்பூசி போடும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் இராணுவத் தளபதி மேலும் கூறினார்.

## வவுனியாவில்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளம் பகுதியில் சுகவீனம் காரணமாக வீட்டில் மரணமடைந்த பெண்ணுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியாகுடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் சுகவீனம் காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் நேற்று முன்தினம் மாத்திரம் 3 பெண்கள் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மகாநாயக்க...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதி இன்று இரவு உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்.

நாட்டை முடக்கினாலும் அத்தியாவசிய சேவைகள் வழமை போன்று முன்னெடுக்கப்படும் - என்றார்.

நாட்டில் நிலவும் கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு நாட்டை ஒரு வாரத்துக்காவது முடக்க நடவடிக்கை எடுக்குமாறு மகாநாயக்க தேரர்களால் நேற்று ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குற்றவியல்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செப்ரெம்பர் ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமை தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ள நிலையில் இதில் எமது மக்கள் மீது இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளை கொண்ட இவ்வுயரிய சபையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது-

இதற்கமைய, திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பிற்கு குற்றவியல் நீதிமன்றிற்கு ஊடாகவோ அல்லது விசேட குற்றவியல் நீதிமன்றம் ஊடாகவோ நீதி கிடைக்க வேண்டும் எனவும் அக் கூட்டத் தொடர் எமது விடயத்தை குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்று கோருகின்றோம் - என்றபிரேரணை முன்மொழியப்பட்டது.

இதனை கூட்டமைப்பு உறுப்பினர் இராகினி வழிமொழிய சபையில் இருந்த ஈ.பி.டி.பியினர் உட்பட 19 பேரும் ஏற்றுக் கொண்டனர். இதன்போது சபையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் 7 பேர் பிரசன்னமாகியிருந்து சபையின் கோரத்தை உறுதிப்படுத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யாழில்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் வர்த்தக நிலையங்கள் தொடக்கம் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வரை மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.



இன்று பிற்பகல் முடக்கம் குறித்த அறிவிப்பு வெளியான பின்னர் நூற்றுக்கணக்கான மக்கள் ஒவ்வொரு எரிபொருள் நிலையத்திலும் திரண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. அதேவேளை, வர்த்தக நிலையங்களிலும் மக்கள் அலை மோதினர்.

## ஜனாதிபதி...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடக்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமண...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் பங்கேற்றவர்களுக்குப் பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

நாட்டில் உருவாகியுள்ள கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக திருமணங்கள் உள்ளிட்ட விழாக்கள் நடைபெறுவதற்குக் கடந்த 17ஆம் திகதி முதல் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் குறித்த வீட்டில் அளவுக்கதிகமானவர்கள் ஒன்றுகூடி திருமண நிகழ்வில் பங்கேற்றுள்ளனர். இதையடுத்து குறித்த திருமணவிழாவில் பங்கேற்றவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அண்மையில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் பூப்புனித நீராட்டு விழா நிகழ்வில் பங்கேற்ற சிலருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு



## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் -onlinekathir.com

# இக்கட்டில் கொழும்பு

**சர்வதேச இராஜதந்திர விடயம் ஒன்றில் சிக்குப்பட்டு முழுசுகின்றது இலங்கை.**

**'தென்னையிலே தேள் கொட்டினால் பனையில் நெறி கட்டின மாதிரி! விவகாரம் இது. ஆப்கானிஸ்தானில் நடந்த ஆட்சி மாற்றம் கொழும்பில் குழப்பத்தை ஏற்படுத்தி நிற்கின்றது. ஆப்கானில் இதுவரை அமெரிக்கா கொடுத்த முண்டில் தாக்குப்பிடித்து வந்த அஷ்ரப் கனியின் அரசு, அமெரிக்கத் துருப்புகளின் விலகலுடன் கவிழ்ந்தது. பாதுகாப்புக் கருதி அஷ்ரப் கனி நாட்டை விட்டுத் தப்பி ஓடிவிட்டார். தலைநகர் காபூலில் நிலைகொண்டிருந்த தலிபான்கள் நகருக்குள் புகுந்து ஆட்சியை பலவந்தமாக கைப்பற்றி கொண்டுள்ளனர். ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய இராஜ்ஜியம் என்று தங்கள் நாட்டுக்குப் புதுப்பெயர் சூட்டி கொண்டுள்ளனர் என அவர்கள் அறிவித்துள்ளனர்.**

**ஆட்சி மாற்றம் என்னவோ ஆப்கானிஸ்தானில்தான். ஆனால் இங்கோ – கொழும்பிலோ – அந்தப் புதிய ஆட்சியை ஏற்று, அங்கீகரித்து, அதனுடன் இராஜதந்திர தொடர்பாடல்களை ஆரம்பிப்பதா என்ற சர்ச்சை.**

**ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் என்ற இக்கட்டு இலங்கைக்கு.**

**தன்னுடைய அரசியல், இராஜதந்திர நிலைப்பாடு காரணமாக புதிய உலக ஒழுங்கில் வித்தியாசமான தரப்புகளுடன் கன்னை பிரிந்து நிற்கின்றது இலங்கை.**

**ஐ.நாவிலும் பிற சர்வதேச தளங்களிலும் தனக்கு எதிராக – பிரதானமாக மனித உரிமைகள் விவகாரம் மற்றும் புவியியல் பாதுகாப்பு சார்பு நிலைமை காரணமாக – மேற்குலகம் எடுத்திருக்கும் கடுமையான நிலைப்பாட்டுக்கு முகம் கொடுக்கும் நோக்கில் பிழையான தரப்புகளுடன் இப்போது அணி கட்டி நிற்கிறது இலங்கை.**

**சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் என்று கொழும்பு அணி சேர்ந்திருக்கும் தரப்புக்கள் சர்ச்சைக்குரியவை. அமெரிக்க முண்டில் நின்று பிடித்த ஆப்கான் அரசு கவிழ்ந்து, காபூல் நிர்வாகத்தை தலிபான்கள் முழு கட்டுப்பாட்டில் கொண்டு வர முன்னரே புதிய காபூல் ஆட்சியாளர்களை இலங்கை தரப்பின் தற்போதைய ஆபத்பாந்தவர்களான சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் எல்லாம் அங்கீகரித்து விட்டன.**

**என்ன செய்யப் போகின்றது கொழும்பு?**

**ரஷ்யப் படைகள் ஆப்கானைக் கைப்பற்றி வைத்திருந்த போது அவற்றுக்கு எதிராக தலிபான்களையும், இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளையும் அங்கு வளர்த்து விட்டது அமெரிக்கா. அந்த சர்ச்சையை வைத்து விடயத்தை ஊதிப் பெருப்பித்து, சோவியத் ரஷ்ய குடியரசை பிரித்து, சிதறடிக்க வைத்தது அமரிக்கா. ஆனால் இரட்டை கோபுரத் தாக்குதலையடுத்து பயங்கரவாதிகளை அழிக்கின்றோம் என்ற பெயரில் ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்து, தலிபான்களின் ஆட்சியை சின்னாபின்னமாக்குகிறோம் என்று கூறிய அமெரிக்காவினால் அங்கு 20 ஆண்டுகாலம் கூட தாக்குப் பிடிக்க முடியவில்லை. தான் நிறுவிய பொம்மை அரசுகளையும் நடுவீதியில் கைவிட்டு, வியட்நாமில் இருந்து அவமானத்துடன் திரும்பிய மாதிரி இப்போது ஆப்கானில் இருந்தும் விலகி உள்ளது. சர்வதேச விவகாரங்களில் அமெரிக்காவின் ஆளுமை சந்தி சிரிக்கும் நிலைமை இன்று.**

**சும்மா கிடந்த ஆப்கான் முதலில் ரஷ்யப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளானது. அடுத்து அமெரிக்காவின் முறை. அதுவும் இரண்டு தசாப்தங்களுக்குடன் முடிவுற்றுவிட்டது இனி, தலிபான்களுக்கு ஆசீர்வாதம் அளித்துள்ள சீனாவின் ஆக்கிரமிப்பு கட்டவிழலாம். அது நேரடிப் பிரசன்னம் இல்லாமல் வேறு வழிகளில் அமையக்கூடும்.**

**புதிய ஆப்கான் அரசை அங்கீகரிக்கும் வேகத்தில் ஆப்கான், சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் ஆகியன இந்தப் பிராந்தியத்தில் பரந்த நிலப்பரப்பில் ஒன்றுபட்டு இருக்கின்றன. ஏற்கனவே மியன்மார், இலங்கை போன்றவை சீனாவின் மடியில்.**

**புதிதாகக் கட்டவிழ்கின்ற உலக ஒழுங்கு, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பெரும் சவாலாக இருக்கப்போவது உறுதி. இலங்கைத் தீவில் தங்களின் உண்மையான நண்பன் யார், கபடத்தனமான எதிரி யார் என்பதை இன்னமும் அடையாளப்படுத்த முடியாத இந்தியா, அதனால் நடுவில் நின்று தத்தளிக்க போவது தென்படுகின்றது.**

**இலங்கை என்ன செய்யப் போகின்றது? தன்னுடைய உற்ற நட்பு நாடுகளான சீனா, பாகிஸ்தான், ரஷ்யா வழியில் இந்த இஸ்லாமிய தீவிரவாத ஆட்சியை அவசரப்பட்டு அங்கீகரிக்கப் போகின்றதா? அல்லது பாமியன் புத்தர் சிலைகளைத் தகர்த்த இந்த இஸ்லாமியத் தீவிரவாதிகளின் ஆட்சியை பௌத்த, சிங்கள பேரினவாத போக்கில் நிராகரிக்க போகின்றதா?**

**கொழும்புக்கு முடிவெடுக்க இக்கட்டான விவகாரம் இது.**

# மோட்டார் சைக்கிள் போலி ஆவணங்கள் தயாரித்தவர் நீர்கொழும்பில் கைதானார்

மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஜெசி மற்றும் இயந்திர (என்ஜின்) இலக்கத்தை போலியாக மாற்றியமைத்த குற்றச்சாட்டின் கீழ் சந்தேக நபர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை நீர்கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் கடந்த வியாழக்கிழமை குரன பகுதியில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை பரிசோதனை செய்தனர்.

இதன்போது மேற்படி மோட்டார் சைக்கிளின் ஜெசி மற்றும் இயந்திர (என்ஜின்) இலக்கம் அழிக்கப்பட்டு, போலியான ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளமையை அவதானித்த பொலிஸார், குறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த 28 வயதுடைய இளைஞர் ஒருவரை சந்தேகத்தில் கைது செய்தமையுடன், அவர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட குறித்த இளைஞனிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின் போது, ஜெசி மற்றும் என்ஜின் இலக்கம் அழிக்கப்பட்டு, போலி ஆவணம் தயாரிக்கப்பட்ட மேலும் ஒரு மோட்டார் சைக்கிளும், அதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரண்டு உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் கைதான 62 பேருக்கு தொடர்ந்தும் மறியல்!

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைதான 62 பேரையும் மீண்டும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் நேற்று (வியாழக்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மேற்படி தாக்குதல் சம்பவத்துடன் கைதாகி விளக்கமறியலில்வைக்கப்பட்ட அனைவரும், வெவ்வேறு சிறைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கும் நிலையில், மீண்டும் நேற்று விசாரணைக்காக முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இவ்வாறு விசாரணைக்காக வந்த சந்தேக நபர்கள் அனைவரும், கடந்த காலங்களில் அம்பாறை காத்தான்குடி மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து கைதாகி பல மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேலும் பொலிஸாரின் ஆட்சேபனையுடன் அனைத்து சந்தேகநபர்களதும், விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டு, இந்த வழக்கு விசாரணை அடுத்த வழக்கு தவணையை செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இவ்வாறு கைதான சந்தேகநபர்கள் அனைவரும் காத்தான்குடி, கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

குறித்த சந்தேகநபர்கள் அனைவரும், கடும் பாதுகாப்புக்கு மத்தியில் அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவர்களை பார்வையிடுவதற்காக அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள், நீதிமன்ற வாசலில் குழுமியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கத்தோலிக்க ஆலய திருப்பலிகளை நடத்தாமலிருப்பது தொடர்பில் ஆய்வு

## மன்னார் மாவட்ட அரச அதிபர் ஆலோசனை



மன்னார் மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் திருப்பலிகளை நடத்தாது இருக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் நேற்று (வியாழக்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் நாட்டில் கொவிட்தொற்று அதிகரித்து வரும் நிலையில் அரசு மற்றும் சுகாதாரத் துறையினர் இறுக்கமாக சுகாதார நடைமுறைகளை அமுல்படுத்தி உள்ளனர். அதற்கமைவாக மதஸ்தலங்களில் எவ்வித கூட்டுப் பிரார்த்தனைகளையும் மேற்கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மன்னார் மாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் திருப்பலிகளை மேற்கொள்ள தடை விதிக்குமாறு கோரி மன்னார் மறைமாவட்ட ஆயரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ள நிலையில், திருப்பலிகள் மற்றும் வழிபாடுகள் அனைத்தையும் நிறுத்த ஆயர் பங்கு தந்தையருக்கு அறிவித்துள்ளார். மேலும் இந்து மற்றும் இஸ்லாமிய மதஸ்தலங்களிலும் மக்கள் ஒன்று கூடுவதை தவிர்க்க உரிய தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்.

அனைவரது பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் பட்சத்தில் மன்னார் மாவட்டத்தை கொவிட் தொற்றில் இருந்து முழுமையாக பாதுகாத்துக்கொள்ள முடியும். இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை உள்ளிட்ட 6 நாடுகளுடன் மீண்டும் நேரடி விமான சேவையை ஆரம்பிக்கும் குவைத்

இலங்கை, இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷ், எகிப்து ஆகிய நாடுகளுடன் மீண்டும் நேரடி விமான சேவையை ஆரம்பிப்பதற்கு குவைத் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற குவைத் அமைச்சரவை கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குவைத் அரசாங்கத்தின் செய்தித் தொடர்பாளர் தாரெக் அல்–மஸ்ரெம் தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் அவசர குழு விதித்த விதிமுறைகளுக்கு இணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# குழந்தைகளையாவது காப்பாற்றுங்கள்..! கெஞ்சிக் கேட்கும் தாய்மார்கள்

## ஆப்கானில்




ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்த அமெரிக்கப்படைகள் வெளியேறியதை தொடர்ந்து, தலிபான்கள் அந்த நாட்டு அரசை கைப்பற்றி உள்ளன.

புதிய அதிபர் மற்றும் புதிய அரசை அமைப்பது தொடர்பாக தலிபான் தலைவர்கள் தொடர் பேச்சில் ஈடுபட்டு உள்ளனர்.

புதிய அரசின் கட்டமைப்பு குறித்து விரைவில் அறிவிப்பதாகவும், அது ரியத் சட்டப்படி நடத்தப்படும் எனவும் தலிபான்கள் கூறியுள்ளனர்.

இந்த நிலையில் 1919ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றதன் நினைவாக 102ஆவது சுதந்திர தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

இதையொட்டி ஆப்கானிஸ்தானை இஸ்லாமிய அமீரகமாக (இஸ்லாமிக் எமிரேட் ஆப் ஆப்கானிஸ்தான்) தலிபான்கள் பிரகடனம் செய்தனர். இதை தலிபான் செய்தி தொடர்பாளர் சபியுல்லா முகைது தனது டுவிட்டர் தளத்தில் வெளியிட்டு உள்ளார். ஆப்கானிஸ்தானில் சுமார் 20 ஆண்டுகளுக்குப்பிறகு மீண்டும் ஆட்சியை பிடித்திருக்கும் தலிபான்களால் நாடு முழுவதும் பெரும் பதற்றம் நீடித்து வருகிறது.

இதுஒருபுறம் இருக்க, தலிபான்களுக்கு எதிராக நாடு முழுவதும் ஆங்காங்கே மோதல்கள் தொடங்கி விட்டன. குறிப்பாக ஜலாலாபாத் நகரில் தலிபான்களின் கொடியை இறக்கி விட்டு ஆப்கானிஸ்தான் தேசியக்கொடியை போராட்டக்காரர்கள் ஏற்றினர். அங்கு நடந்த வன்முறையில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதைப்போல கோஸ்ட் மாகாணத்தில் வன்முறை சம்பவங்கள் மூண்டதை தொடர்ந்து மாகாணம் முழுவதும் 24 மணி நேர ஊரடங்கை தலிபான்கள் அமுல்படுத்தி உள்ளனர்.

காபூல் விமான நிலையத்தில் வெளியேறுவதற்கு சுமார் 6 ஆயிரம் பேர் காத்திருக்கின்றனர் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவ வீரர்கள் பாதுகாப்பில் உள்ள இவர்கள் விரைவில் விமானங்கள் மூலம் அழைத்து வரப்படுவார்கள் என்றும் ஜோ பைடன் அரசு உறுதியளித்துள்ளது.

இந்நிலையில், அங்கிருந்து தப்பிச் செல்ல முடியாதவர்கள், தங்கள் குழந்தைகளாவது உயிர் பிழைக்கட்டும் என அமெரிக்க இராணுவத்தினரிடமும், தப்பிச் செல்லும் நபர்களிடமும் தங்கள் குழந்தைகளை கொடுத்து அனுப்புகின்றனர். ஆனால் அவ்வாறு அழைத்துச் செல்ல தங்களுக்கு உரிமையில்லை என வீரர்கள் கண் கலங்கியவாறு தாய்மார்களிடமே குழந்தை களை ஒப்படைத்துள்ளனர். இதுதொடர்பான கண்ணீர் காட்சிகள் வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் மீண்டும் கொரோனா பாதிப்பு அதிகரிப்பு;

## 2 வாரங்களில் இறப்பு எண்ணிக்கை அதிகரிப்பு



அமெரிக்காவில் மீண்டும் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா பாதிப்பு நாள் ஒன்றுக்கு 1.5 லட்சத்துக்கு மேல் சென்று உள்ளதாக கூறப்படுகிறது.

கொரோனா முதல் அலை பரவலில் கடுமையாக பாதிக்கப்பட்டது அமெரிக்கா தான். அங்கு தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டு உயிரிழந்தனர். ஆனால் அதன் பின் அமெரிக்கா தடுப்பூசி போட்டு பரவலைக் கட்டுப்படுத்தியது.

இந்நிலையில் இப்போது அங்கு உருமாறிய டெல்டா வகை கொரோனா வைரஸ் பரவி வருகிறது.

கடந்த சில தினங்களாக இந்தப் பரவல் அதிகமாகியுள்ள நிலையில் இப்போது அங்கு மூன்றாவது அலை தொடங்கி விட்டதாக அச்சம் எழுந்துள்ளது. தினசரி பாதிப்பு அங்கு 1.6 லட்சத்துக்கு மேல் உள்ளதாகவும். சில தினங்களாக தினசரி சராசரி 800இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

42 மாநிலங்களில் இறப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது, இது டிசெம்பர் மாதத்திற்குப் பிறகு மிக கூடுதல் எண்ணிக்கையாகும். கடந்த புதன்கிழமை முடிவடைந்த வாரத்தில், அமெரிக்கா 5,742 இறப்புகளைப் பதிவு செய்து உள்ளது. ஓகஸ்ட் மாதத்தின் முதல் 18 நாள்களில் கொரோனாவால் 10,991 அமெரிக்கர்கள் இறந்து உள்ளனர்.

## பாகிஸ்தான் ஊர்வலத்தில் குண்டுவெடிப்பு: மூன்று பேர் உடல் சிதறி உயிரிழப்பு



பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் பகவல்நகர் என்ற நகரம் பழைமைவாத நகரம் ஆகும். அங்கு நேற்று சிறுபான்மை மக்களான ஷியா பிரிவு முஸ்லிம்கள் ஊர்வலம் நடத்தினர். ஷியா பிரிவு மக்களின் பேரன்புக்குரிய புனிதர் உசேனின் 7ஆம் நூற்றாண்டு மரணத்துக்கு வருடாந்திர நினைவு அனுசரிக்கும் வகையில் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. இந்த ஊர்வலம், ஈராக்கின் கர்பலா நகரில் நடந்த போரில் உசேன் மரணம் அடைந்ததை நினைத்து மக்கள் நெகிழும் உணர்வுபூர்வமான நிகழ்வு ஆகும்.

இந்த ஊர்வலத்தில் திரளான ஷியா பிரிவு முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர். ஊர்வலமானது, முகாஜிர் காலனி என்ற நெரிசலான பகுதியைக் கடந்து சென்றது.

அப்போது சாலையோரம் புதைக்கப்பட்டிருந்த குண்டு பலத்த சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதில் அந்தப் பகுதியே அதிர்ந்ததுடன், கரும்புகை மண்டலம் உருவானது. ஊர்வலத்தில் சென்ற மக்கள் பதறியடித்துக் கொண்டு, உயிரைக்காப்பாற்றிக் கொள்ள நாலாபுறமும் ஓட்டம் எடுத்தனர். பலர் காயம் அடைந்து இரத்தம் சிந்தியவாறு தரையில் சாய்ந்தனர். குண்டு வெடிப்பு பற்றி தகவல் அறிந்ததும் பொலிஸாரும் மீட்புப்படையினரும் அங்கு விரைந்தனர். அம்புலன்ஸுகளும் வந்தன.

இந்த குண்டுவெடிப்பில் குறைந்தது 3 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர் என முதல் கட்ட தகவல்கள் கூறுகின்றன. 50 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்ததாகவும் சொல்லப்படுகிறது. படுகாயம் அடைந்தவர்கள் உடனடியாக அங்கிருந்து மீட்கப்பட்டு அம்புலன்ஸுகளில் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த குண்டுவெடிப்பால் அந்த நகரத்தில் பதற்றம் நிலவுகிறது.

இந்த குண்டுவெடிப்பை அந்த நகர பொலிஸ் அதிகாரி முகமது ஆசாத் உறுதி செய்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக ஷியா பிரிவு தலைவர் கவார் ஷாப்கத் கருத்து தெரிவிக்கையில், ஊர்வலம், ஒரு நெரிசலான பகுதியைக் கடந்து சென்றபோது, சாலையோரம் புதைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்துள்ளது. இது கடும் கண்டனத்துக்கு உரியது.

இத்தகைய ஊர்வலத்தின் போது அரசு போதுமான பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கூறினார்.

## புர்கினா பாசோவில் நேற்றுமுன்தினம் இராணுவம் - தீவிரவாதிகள் மோதல்

### 47 பேர் கொன்று குவிப்பு

புர்கினா பாசோவில் இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து இதுவரையில் வன்முறை காரணமாக 17 ஆயிரம் பேர் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் பொதுமக்களை அழைத்துச் சென்ற இராணுவ வாகனம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அப்போது தீவிரவாதிகளுக்கும், இராணுவ வீரர்களுக்கும் கடும் மோதல் வெடித்தது. இதன் முடிவில் 30 அப்பாவி மக்கள் உள்பட 47 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். 19 பேர் படுகாயம் அடைந்தனர். பலியானவர்களில் 14 பேர் இராணுவ வீரர்கள் ஆவர். 3 பேர் தன்னார்வலர்கள்.

இந்த மோதல் குறித்து இராணுவத்தரப்பில் கூறும்போது, தீவிரவாதிகளுக்கு இராணுவ வீரர்கள் கொடுத்த பதிலடியில் 58 பேர் பலியானர் எனத் தெரிவித்தனர். இந்த மோதல், அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.





# விடுதலை அல்லது சாகும் வரை போராட்டம்!

## தொடர்ந்து தற்கொலைக்கு முயலும் இலங்கை அகதிகள்



தமிழகத்தின் திருச்சி மத்தியச் சிறை வளாகத்தில் உள்ள வெளிநாட்டினர் அடைக் கப்பட்டுள்ள சிறப்பு முகாமில் இருந்து தங் களை விடுதலை செய்ய வலியுறுத்தி, இலங் கைத் தமிழ் அகதிகள் தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

திருச்சி மத்திய சிறையில் உள்ள அகதி களுக்கான சிறப்பு முகாமில், தண்டனைக் காலம் முடிந்தும் அடைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் 80 பேர் தங்களை விடுவிக்க வலியுறுத்தி தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதன் ஒரு பகுதியாக சிலர், விடுதலை வேண்டி வயிற்றை கத்தி யால் அறுத்துக் கொண்டும் தூக்க மாத்திரை சாப்பிட்டும் தற்கொலை முயற்சிப் போராட் டத்தையும் நடத்தி வருகின்றமையால் பர பரப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்த பேச்சுகளிலும் எவ்விதத் தீர்வும் எட்டப்படாததால் விரக்தியடைந்த முகாம் வாசிகளில் இருவர் நேற்று முன்தினம் கத்தி யால் தங்களது கழுத்து மற்றும் வயிற்றைக் கிழித்துக்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர். மேலும் சிலர் தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளனர். முதல் நாளில் மொத்தம் 16 பேர் தற்கொலை முயற்சி மேற்கொண்டு திருச்சி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டிருந்தனர். இவர்களைத்தொடர்ந்து இன்று மேலும் 12 பேர் தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றுள்ளனர்.

அனைவருக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு வரும் நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் இலங்கைத் தமிழர்கள் அனைவரும் உணவு உண்ண மறுத்து, உண்ணாவிரதப்போராட்டத்தையும்தொடங்கி யுள்ளனர். இவர்களில் 10 நாள்களாக முகாமில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வந்த நிரூபன், முகுந்தன் இருவரின் உடல் நிலையையும் மருத்துவக் குழுவினர் இன்று சோதனை செய்தனர். அவர்களின் இதயத் துடிப்பு 50க்கும் கீழாகக் குறைந்த நிலையில், இருவரும் கோமா நிலைக்கு செல்லும் அபாயம் இருந்தது. இருப்பினும் அவர்கள் சிகிச்சைக்கு ஒத்துழைக்க மறுத்துவிட்டனர்.

அதையடுத்து, பொலிஸாரின் உதவி யுடன் இருவரும் வலுக்கட்டாயமாக அங்கி ருந்து அகற்றப்பட்டு, அம்புலன்ஸ் மூலம் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ம ருத்துவமனைக்குச் சென்றாலும், 'விடுதலை அல்லது சாகும் வரை உண்ணாவிரதம் என்பதே தங்களது நிலைப்பாடு' என்பதில் இருவரும் உறுதியாக இருக்கின்றனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.



## தினசரி கொரோனாப் பாதிப்பு எண்ணிக்கை தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக குறைவடைகிறது

தமிழகத்தில் மேலும் 1,702 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. நேற்றைய தினம்1,797 என்றிருந்த நிலையில், இன்று பாதிப்பு குறைந்துள்ளது. சென்னையிலும் தினசரி தொற்றா ளர்கள் எண்ணிக்கை 193 ஆகக் குறைந்துள்ளது. தொற்று உறுதி யானவர்களில், 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 90 பேர் இருக்கின்றனர் என மருத்துவத்துறை அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகிச்சை பலனின்றி கடந்த 24 மணிநேரத்தில் அரசு மருத்துவம னையில் 20 பேரும் தனியார் மருத்துவமனையில் 9 பேருமாக மொத்தம் 29 பேர் உயிரிழந்துள் ளனர். அதிகபட்சமாக கோவையில் 5 பேரும், சென்னையில் 4 பேரும் உயிரிழந்துள்ளனர். 23 மாவட் டங்களில் கொரோனாவால் கடந்த 24 மணி நேரத்தில் ஓர் உயிரி ழப்புக்கூட இல்லை என்ற நிலை யும் உருவாகியுள்ளது. இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 34,639 ஆகவுள்ளது.

இதேபோல கடந்த 24 மணி நேரத்தில் மொத்தம் 1,892 பேர் குணமடைந்த காரணத்தால் தற்போது கொரோனாவுக்காக 19,864 பேர் மட்டுமே சிகிச்சையில் இருக்கின்றனர் என கூறப்பட்டுள் ளது. மொத்தம் இதுவரை 25,41, 432 பேர் கொரோனாவிலிருந்து குணமடைந்துள்ளனர் என்றும் தரவுகள் கூறுகின்றன.

## சாதியைக் காரணம் காட்டி வளர்ச்சியை தடுக்கக்கூடாது; மு.க.ஸ்டாலின் வலியுறுத்து



சாதியைக் காரணம் காட்டி ஆதி திராவிடர், பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சி தடுக்கப்படக் கூடாது என்பதே தமிழக அரசின் சிந்தனை என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர் நிலைக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் சென் னையில் நடைபெற்றது. இதில் பங்கேற்றுப் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பின் தங்கியுள்ள மக்களின் வாழ்வியல் பொருளா தார முன்னேற்றத்திற்கு அரசு எப்போதும் துணையாக இருக்கும் என உறுதி அளித்தார்.

தீண்டாமைப் பாகுபாட்டைக் காட்டுவது சட்டப்படி தவறானது என்ற எண்ணமின்றி, சிலர் அதைத் தைரியமாக செய்கின்றனர் எனத் தெரிவித்த தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இதுபோன்ற சட்ட மீறல்கள் தடுக்கப்பட வேண்டும், தண்டிக்கப்பட வேண் டும் எனவும் வலியுறுத்தினார்.

## தமிழகத்தில் திருப்புவனத்தில் அகழ்வாய்வுப் பணிகள் தீவிரம்




தமிழகத்தில் திருப்புவனம் அருகே கீழடியில் 6 ஆம் கட்ட அகழாய்வுப் பணி கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. இந்த அகழாய்வுப் பணி கீழடி மற்றும் அகரம், கொந்தகை, மண லூர் ஆகிய 4 இடங்களிலும் விரிவு படுத்தப்பட்டு பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.

அவற்றில் செங்கல் கட்டுமானம், இரட்டைச் சுவர், விலங்குகளின் எலும்பு, மனித எலும்புகள், மண் பானைகள், ஓடுகள், சிறிய உலை கலன் உள்ளிட்ட பழைமையான பொருள்கள் கண்டறியப்பட்டு வருகின்றன. அகரத்தில் ஆறு குழிகள் தோண்டப்பட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டுவருகின்றன.

இங்கு நீள வடிவ பச்சை நிறப் பாசிகள் போன்றவை ஏற்கெனவே கண்டெடுக் கப்பட்டன.

தற்போது அந்தப் பகுதியில் இருந்து சுடு மண்ணாலாலான முத்திரை ஒன்றும் கண்டறியப்பட்டுள்ளது. அதன் படத்தை தமி ழக அமைச்சர் தங்கம் தென்னரசு தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## குழந்தைகளுக்கான கொரோனாத் தடுப்பூசி விரைவில் இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் தகவல்

நாடு முழுவதும் குழந்தைகளுக்கான கொரோனாத் தடுப்பூசி விரைவில் அறிமுகம் செய்யப்படும் என இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் செய்தியாளர்களை சந் தித்த மன்சுக் மாண்டவியா, இந்திய மக்கள் ஒவ்வொருவருக் கும் கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்த மத்திய அரசு உறுதி பூண்டிருப்பதாகக் கூறினார். குழந்தைகளுக்கான தடுப்பூசி ஆராய்ச்சியை மேற்கொள்ள ZYDUS CADILA மற்றும் பாரத் பயோடெக் நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகவும், அதற்கான முடிவுகள் அடுத்த மாதத்தில் தெரியவரும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். இதனால் குழந்தைகளுக்கான தடுப்பூசி விரைவில் பயன்பாட்டுக்கு வரும் என்ற நம்பிக்கை பிறந்தி ருப்பதாகவும் அமைச்சர் மாண்டவியா தெரிவித்தார்.

பாரத் பயாடெக் நிறுவனத்தின் கொவோக்சின் தடுப்பூசி யின் 2 முதல் 18 வயதுடையோருக்கான மூன்றாம் கட்டப் பரிசோதனை செப்டெம்பரில் தொடங்கும் என முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளது.

ZYDUS CADILA நிறுவனம் உருவாக்கிவரும் தடுப்பூசி, 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகளுக்கு விரைவில் கிடைக்க வாய்ப்பு இருப்பதாக உச்ச நீதிமன்றத்தில் இந்திய மத்திய அரசு தெரிவித்திருந்தது. அந்த நிறுவனத்தின் சைகோவ் - டி தடுப்பூசியை குழந்தை களுக்கும் பெரியவர்களுக்கும் செலுத்தலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# மட்டக்களப்பில் 9 நாள்களுக்கு கடைகள் பூட்டு





மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா தொற்று அதிகரித்ததன் காரணமாக இன்று முதல் 29ஆம் திகதி வரை நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு வர்த்தகர் சங்கம் முடிவு செய்துள்ளதாக வர்த்தக சங்கத்தலைவர் கே.செல்வராசா தெரிவித்தார்.

அதன் காரணமாக இன்று வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதோடு, மருந்தகங்கள் உட்பட அத்தியாவசிய பொருள் விற்பனை நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

அதேபோன்று வீடுகளில் இருந்து ஒருவரை மட்டும் வெளியில் அனுப்பி அத்தியாவசிய பொருள்களை மாத்திரம் கொள்வனவு செய்யுமாறு மட்டக்களப்பு வர்த்தகர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

எதிர்காலத்தில் மாவட்டத்தை கொரோனாத் தொற்றில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்பது தான் தமது சங்கத்தின் ஒரே குறிக்கோள், அதனாலேயே இந்த முடிவை அனைத்து வியாபார நிலையங்களின் உரிமையாளர்களும் ஏற்று மக்களைக் காப்பாற்ற முன்வரவேண்டுமென இதன்போது கேட்டுக்கொண்டுள்ளார்.



## கல்முனை வடக்கு பிரதேசத்தில் எட்டு பேருக்கு கொரோனாத் தொற்று

அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப்பணிமனைக்குட்பட்ட பகுதியில் 8 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பிராந்திய சுகாதாரப்பணிமனை தெரிவித்துள்ளது.

எழுமாற்றாக 20 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 08 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கல்முனை வடக்குபிராந்திய சுகாதாரப்பணிமனைக்குட்பட்ட கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, சேனைக் குடியிருப்பு, துறைவந்தியமேடு, நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் கொரோனாத் தொற்றாளர்களை அடையாளங் கண்பதற்கான அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

## நிந்தவூர் வைத்தியசாலையில் கவனவீர்ப்பு போராட்டம்

நாட்டில் வேகமாக பரவிக் கொண்டு இருக்கும் கொவிட் 19 வைரஸ் தொற்றின் 3வது அலையினை எதிர் நோக்கிக் கொண்டு இருக்கும் இக் காலகட்டத்தில் அரசு நாட்டை முற்றாக முடக்குவது தொடர்பில் எந்தவிதமான விசேட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் இருப்பது அதிகமான உயிரிழப்பை சந்திக்க வழிவகுக்கும் எனும் மாக முடக்குங்கள், பொது மக்களுக்கு பாதுகாப்பு வழங்குங்கள், போதிய அளவு பி.சி.ஆர். பரிசோதனைகளை நாடு முழுவதும் செய்யுங்கள், வைத் தியசாலையில் அவசர நடைமுறைகளுக்கு ஏற்பபடுக்கைகளையும் அவசர சிகிச்சை பிரிவுகளுக்கான போதிய வசதிகளையும் பெற்றுக் கொடுங்கள் என்ற கோரிக்கைகளை முன்வைத்த சுலோகங்களுடன்



கோரிக்கையை வலியுறுத்தி கவனவீர்ப்பு போராட்டமொன்று நிந்தவூர் வைத்தியசாலை முன்றலில் இடம்பெற்றது.

இந்தப்போராட்டத்தின்மூலம் நாட்டை உடனடியாக முடக்குமாறு கோரிக்கை விடுக்கும் சுகாதார தொழிற்சங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் இணைந்து நாட்டை அவசர கவனவீர்ப்பு போராட்டத்தினை நடத்தினர்.

அந்த அடிப்படையில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் அனைத்து சுகாதார தொழிற்சங்க அதிகாரிகளும் ஒன்றிணைந்து கடந்த புதனன்று அரசிடம் அதே வேண்டுகோளை விடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.




## காத்தான்குடி பிரதான வீதியில் மூன்று வாகனங்கள் விபத்து

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதான வீதியில் நேற்று இரவு வேளையில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று வாகனங்கள் சேதமாகியுள்ளன.

மட்டக்களப்பில் இருந்து ஆரையம்பதி நோக்கிப் பயணித்த ஹயஸ் ரக வாகனம் முன்னால் சென்ற கே.டீ.எச். ரக வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் ரக வாகனம் மின்கம்பத்துடன் மோதியதுடன் அருகில் தரித்து நின்ற சிறிய ரக லொறியுடனும் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த விபத்தை ஏற்படுத்திய ஹயஸ் ரக வாகனம் உட்பட மூன்று வாகனங்களும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளமையுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரனைகளை காத்தான்குடி போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸாரின் தடுப்புக் காவலில் உயிரிழந்த விதுசனின் உடலம் கொழும்புக்கு மாற்றம்



மட்டக்களப்பில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நிலையில் உயிரிழந்த விதுசனின் உடலை உடல்கூற்று பரிசோதனைக்காக கொழும்புக்கு மாற்றுமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடந்தஜூன்மாதம்3ஆம் திகதி சந்திரன் விதுசன் எனும் இளைஞன் ஐஸ் போதைப்பொருள் வியாபாரம்செய்வதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட நிலையில் மறுநாள் காலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சடலமாக ஒப்படைக்கப்பட்டிருந்தார். குறித்த வழக்கு விசாரணை நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதி பதி ஏ,சி ரிவான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. புதைக்கப்பட்ட விதுசனின் உடலை மீண்டும் கடந்த ஜூன் மாதம் தோண்டி எடுத்து பேராதனைப் பல்கலைக்கழகத்தினுடைய பேராசிரியர் முன்னிலையில் மீளவும் பிரேத பரிசோதனை மேற்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அந்த வகையில் தோண்டி எடுக்கப்பட்ட விதுசனின் உடலம் அனுராதபுரத்திற்கு எடுத்து செல்லப்பட்டிருந்த நிலையில் குறித்த சடலத்தின் மீதான பிரேத பரிசோதனையின் அறிக்கை கிடைக்காத காரணத்தினால் நேற்று உடல் கூற்று பரிசோதனைக்காக கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளதாக அவருடைய தந்தை தெரிவித்துள்ளார். இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 28 ஆம் திகதி மீண்டும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## ஓட்டமாவடி பிரதேசத்தில் கட்டுப்பாடுகள் அதிகரிப்பு

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்று வரை கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் ஒருவர் மரணமடைந்துள்ளார் என ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் கொவிட் தொற்று நோயைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுங்கள், அத்தோடு அனாவசியமாக வீடுகளை விட்டு வெளியில் செல்லாமல் வீட்டில் இருந்து கொள்ளுங்கள் என்று சுகாதாரத் தரப்பினரும், பொலிஸாரும் ஒலிபெருக்கியில் அறிவுறுத்தல் வழங்கி வருகின்றனர்.

தற்போதைய சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக எவ்வித ஒன்று கூடலையும் நடத்த முடியாது என்பதால் மக்கள் ஒன்று கூடலினை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பொலிஸார் அல்லது சுகாதாரத் துறையினருக்குத் தெரியாமல் இரகசியமாக ஒன்று கூடுவதையும், நிகழ்வுகளை நடத்துவதையும் தவிர்த்துக் கொள்வது நல்லது. அத்தோடு நீரோடைகள் மற்றும் வயல் பிரதேசங்களுக்கு குடும்பத்துடன் செல்வதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# இதய நோயால் அவதியுறு குழந்தைக்காக ஒலிம்பிக் பதக்கத்தை ஏலமிட்ட வீராங்கனை!




குழந்தை ஒன்றின் இதய அறுவை சிகிச்சைக்காக ஒலிம்பிக்கில் வென்ற பதக்கத்தை ஏலம் விட்ட போலந்து வீராங்கனை மரியா அண்ட்ரிஜெக்கின் மனித நேய சேவைக்கு பாராட்டுகள் குவிகின்றன.

போலந்தைச் சேர்ந்த ஈட்டி எறிதல் வீராங்கனை மரியா, அண்மையில் நடந்த டோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கத்தை வென்றிருந்தார். அதே நாட்டைச் சேர்ந்த 8 மாத ஆண் குழந்தையின் அறுவைச் சிகிச்சைக்காக பணம் திரட்ட முடியாமல் அந்தக் குழந்தையின் தாய் கஷ்டப்படுவதை அறிந்து, தனது பதக்கத்தை ஏலம் விடுகிறேன் என மரியா அறிவித்திருந்தார்.



குழந்தையின் உயிரைவிட பதக்கம் ஒன்றும் பெரிதல்ல என பெருந்தன்மையுடன் அவர் கூறியிருந்த நிலையில், போலந்து நாட்டைச் சேர்ந்த ஜாப்கா சூப்பர் மார்க்கெட் என்ற நிறுவனம் பதக்கத்தை 51,000 அமெரிக்க டொலர் பெறுமதிக்கு ஏலம் எடுத்தது. எனினும் மரியாவின் மனிதநேய சேவையை பாராட்டும் வகையில் அந்தப் பதக்கத்தை அவரிடமே திருப்பிக்கொடுத்திருக்கிறது அந்த நிறுவனம்.

# சின்சினாட்டி மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் இரண்டாவது சுற்றின் வெற்றியாளர் விவரம்





சின்சினாட்டி ஆண்களுக்கான மாஸ்டாஸ் டென்னிஸ் போட்டித் தொடரில் ரஷ்யாவின் டனில் மெத்வடீடவ், கிரீஸின் ஸ்டெஃபானோஸ் சிட்சிபாஸ் ஆகியோர் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர்.

போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் மெத்வடேவ் இரண்டாவது சுற்றில் அமெரிக்காவின் மெக்கன்ஸி மக்டொனால்டை 6-2, 6-2 என்ற செட்களில் வீழ்த்தினார். போட்டித்தரவரிசையில் 2 ஆம் இடத்திலிருக்கும் சிட்சிபாஸ் 7-6 (7/5), 6-3 என்ற செட்களில் மற்றொரு அமெரிக்க வீரரான செபஸ்டியன் கோர்டாவைத் தோற்கடித்தார்.

போட்டித்தரவரிசையில் 3 ஆம் இடத்திலிருக்கும் ஜேர்மனியின் அலெக்ஸாண்டா ஸ்வெரேவ் 7-6 (7/3), 6-2 என்ற செட்களில் தென்னாபிரிக்காவின் லொய்ட் ஹரிஸை வென்றார். 10 ஆம் இடத்திலிருக்கும் ஆர்ஜென்டீனாவின் டியேகோ ஷ்வார்ட்ஸ்மன் 6-1, 4-6, 6-4 என்ற செட்களில் அமெரிக்காவின் ஃபிரான்சஸ் டியாஃபோவை வீழ்த்தினார். பிரான்ஸ் வீரர் கேல் மொன்ஃபில்ஸ் 6-3, 7-5 என்ற செட்களில் போட்டித்தரவரிசையில் 14 ஆம் இடத்திலிருந்த ஆஸ்திரேலிய வீரர் அலெக்ஸ் டி மினாரை வெளியேற்றினார்.

அமெரிக்காவின் ஜோன் ஐஸ்னா 5-7, 7-6 (7/4), 6-4 என்ற செட்களில் இத்தாலியின் ஜானிக் சின்னரைத் தோற்கடித்தார். போட்டித்தரவரிசையில் 4 ஆம் இடத்திலிருக்கும் ரஷ்யாவின் அன்ட்ரே ரூபலேவ் 5-7, 6-3, 6-1 என்ற செட்களில் குரோஷியாவின் மரின் சிலிச்சையும், நோர்வே வீரர் கஸ்பா ரூட் 6-7 (5/7), 6-0, 7-6 (7/4) என்ற செட்களில் அமெரிக்காவின் ரைலி ஒபெல்காவையும், போலந்து வீரர் ஹியூபாட் ஹாகாக்ஸ் 7-6 (7/4), 6-3 என்ற செட்களில் இங்கிலாந்தின் அன்டி மரேயையும் வீழ்த்தினர்.

மகளிர் பிரிவில் ஆஸ்திரேலியாவின் ஆஷ்லெ பார்ட்டி, ஜப்பானின் நவோமி ஒசாகா ஆகியோர் இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்றனர். போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் பார்ட்டி 6-4 , 7-6 (7/3) என்ற செட்களில் இங்கிலாந்தின் ஹீதா வொட்சனையும், போட்டித்தரவரிசையில் 2 ஆம் இடத்திலிருக்கும் ஒசாகா 4-6, 6-3, 6-4 என்ற செட்களில் அமெரிக்காவின் கோகோ கௌஃபையும் தோற்கடித்தனர். போட்டித்தரவரிசையில் 4 ஆம் இடத்திலிருக்கும் உக்ரைனின் எலினா ஸ்விடோலினா, 7 ஆம் இடத்திலிருக்கும் கனடாவின் பியான்கா அன்ட்ரிஸ்கு ஆகியோர் முறையே, ஜேர்மனியின் ஏஞ்செலிக் கொபரிடமும் (7-5, 2-6, 6-4), செக் குடியரசின் கரோலினா முசோவாவிடமும் (6-4, 6-2) தோல்வி கண்டனர்.

செக் குடியரசின் பெட்ரர் குவிட்டோவா - ரஷ்யாவின் வெரோனிகா குடர்மெடோவாவையும், பெல்ஜியத்தின் எலிஸ் மொடன்ஸ்-கஜகஸ்தானின் எலனா ரைபாகினாவையும் வீழ்த்தினர். போட்டித்தரவரிசையில் 5 ஆம் இடத்திலிருக்கும் செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா 6-3, 6-2 என்ற செட்களில் கசகஸ்தானின் யுலியா புடின்ட்சேவாவை வெல்ல, போட்டித்தரவரிசையில் 6 ஆம் இடத்திலிருந்த போலந்தின் இகாஸ் வியாடெக் 3-6, 3-6 என்ற செட்களில் துனீசியாவின் ஆன்ஸ் ஜாபியுரிடம் தோல்வி கண்டார். ஸ்பெயின் வீராங்கனை கார்பின் முகுருஸா 6-4, 6-3 என்ற செட்களில் பிரான்ஸின் கரோலின் கார்சியாவை வென்றார்.

# டெல்லி கப்பிட்டல்ஸ் அணியின் தலைவர் யார்?

## ரசிகர்கள் மத்தியில் குழப்பம்

இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரின் இரண்டாம் பகுதிப் போட்டிகள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த மாதம் ஆரம்பமாக இருக்கும் நிலையில் டெல்லி கப்பிடல்ஸ் அணியின் கப்டனாக யார் செயல்படுவார் என்ற முடிவு இன்னும் எட்டப்படாமல் இருக்கிறது.

செப்டெம்பர் 19 முதல் ஒக்டோபர் 15 வரை போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் பங்கேற்பதற்காக சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் உள்ளிட்ட அணிகள் ஏற்கெனவே ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றுவிட்டன. இந்த நிலையில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி நாளை சனிக்கிழமையும் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியும் டுபாய்க்குப் புறப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல அணிகள் ஐ.பி.எல்லுக்கு ஆயத்தமாகும் நிலையில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு கப்டனாக யார் செயற்படப்போகிறார் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.



இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரின்போது ஸ்ரேயாஸ் ஐயர் காயமடைந்த நிலையில் ரிஷப் பண்ட் கப்டனாக நியமிக்கப்பட்டார். இதுவரை அந்த அணி 8 போட்டிகளில் விளையாடி 6 இல் வெற்றியும் 2 இல் தோல்வியடைந்தும் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறது. இப்போது ஸ்ரேயாஸ் ஐயர் குணமடைந்து அணிக்குத் திரும்பியிருப்பதால், அவரையே மீண்டும் கப்டனாக்கலாமா? அல்லது ரிஷப் பண்ட் தொடருவாரா? என்ற குழப்பத்தில் இருக்கிறது டெல்லி கப்பிட்டல்ஸ் அணியின் ரசிகர்கள் உள்ளனர்.

இதுதொடர்பான முடிவை அணி நிர்வாகம் ஏற்கனவே எடுத்திருக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு இருந்தாலும் ஏன் இதுவரை அதனை வெளிப்படையாக அறிவிக்கவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்திய தேசிய கிரிக்கெட் அணியில் தற்போது இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரில் விளையாடிவரும் ரிஷப் பண்ட், செப்டெம்பர் 14 ஆம் திகதிக்குப் பின்னரே இங்கிலாந்திலிருந்து திரும்புவார் என்பதால் ஸ்ரேயாஸ் ஐயருக்கே வாய்ப்பு அதிகமாக இருப்பதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நியூசிலாந்துடனான ரி—20 தொடர் பங்களாதேஷ் அணி அறிவிப்பு



நியூசிலாந்துக்கெதிரான ரி-20 கிரிக்கெட் தொடரில் விளையாடும் பங்களாதேஷ் அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. 19 பேர் கொண்ட அணியில் அனுபவமிக்க வீரர்களான முஷ்பிகுர் ரஹீம் மற்றும் லின்ரன் தாஸ் ஆகியோர் மீண்டும் உள்வாங்கப்பட்டுள்ளனர். அதேபோல சொந்தக் காரணங்களுக்காக விடுப்பில் சென்றிருந்த சகலதுறை வீரரான அமினுல் இஸ்லாமும் மீண்டும் அணியில் இணைந்துள்ளார்.

ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுவதற்காக நியூசிலாந்துக் கிரிக்கெட் அணி பங்களாதேஷ் செல்லவுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ரி-20 போட்டி, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி டாக்காவில் நடைபெறவுள்ளது.

**பங்களாதேஷ் அணி விவரம்**-

மொஹமதுல்லா தலைமையிலான அணியில், சகிப் அல் ஹசன், முஷ்பிகுர் ரஹீம், சௌமியா சர்கார், லின்ரன் தாஸ், மொசடெக் ஹொசைன், ஹபீப் ஹொசைன், நய்ம் ஷெய்க், நுருல் ஹசன், சமீம் ஹொசைன், ரூபெல் ஹொசைன், முஷ்டபிசுர் ரஹ்மான், தஸ்கின் அஹமட், சய்புடீன், சொரிபுல் இஸ்லாம், தைஜுல் இஸ்லாம், மெயிடி ஹசன், அமினுல் இஸ்லாம், நசும் அஹமட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொவிட் தொடர்பான தரவுகள் எவையும் மறைக்கப்படவில்லை

## விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் ஆணித்தரம்

கொரோனா தொடர்பான தரவுகள் மறைக்கப்படவில்லை என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள்கூட, உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியிடப்படுவதற்கு முன்னர், முடிவுகள் தீர்மானிக்கப்பட்டு நிறைவடையக்கூடும் என்று குறிப்பிட்ட அவர், இந்த உதாரணத்தைக் கூறுவதற்கு மன்னிப்பு கோருகிறேன் எனவும் தெரிவித்தார்.

தரவுகள் கிடைக்கப்பெற்று அவற்றை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பிட்ட காலம் தேவையெனவும் அத்துடன், அந்தத் தரவுகளை அறிவிப்பதற்கு குறிப்பிட்ட காலம் எடுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும், தரவுகளுக்கு இடையே சில குறைபாடுகள் ஏற்படலாம் என்றும்அவற்றைத்தாங்கள்திருத்துவதாகவும் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். எவ்வாறிருப்பினும் சுகாதார அமைச்சு என்ற அடிப்படையில் இதனைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# யாழ்.மாவட்ட நிலைமை குறித்து அரச அதிபர் கவலை தெரிவிப்பு



யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் இறப்புகளும் அதிகரித்துச் செல்லும் நிலைமையே காணப்படுவதாக மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

பொதுமக்களும் சமூக பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டிய காலமாக இது காணப்படுகின்றது.

மேலும் வைத்தியசாலைகளில் கூட இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே இத்தகைய சூழ்நிலையை அனைவரும் உணர்ந்து, தமது செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக புதிய வழிகாட்டலின்படி வழிபாட்டிடங்களில் ஒன்றுகூடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய குடும்ப நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள் ஆகியவற்றைக்கூட மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கட்டுப்பாட்டுடன் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே புதிய சுகாதார நடைமுறையை மக்கள் இறுக்கமாக பின்பற்றுவதுடன் அநாவசியமாக வீடுகளிலிருந்து வெளியேறுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்– என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு செல்ல மறுத்த தொற்றாளருக்கு எதிராக வழக்கு

கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு செல்ல மறுத்த வவுனியாவின் பிரபல ஹோட்டல் உரிமையாளர் ஒருவருக்கு எதிராகசுகாதாரப்பிரிவினரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், நீதிமன்றில் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, சின்னப்புதுக்குளம் பகுதியில் ஹோட்டல் நடத்தி வரும் அதன் உரிமையாளர் (வயது 59) ஒருவருக்கு கடந்த 11 ஆம் திகதி கொவிட் தொற்றுஉறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து அவரை கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு கொண்டு செல்ல முற்பட்டபோது அவர் அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், உயர்மட்ட அழுத்தம் காரணமாக வவுனியாவில் 12 கொவிட் தொற்றாளர்கள் சிகிச்சை நிலையத்துக்கு கொண்டு செல்லப்படவில்லை என ஊடகங்களில் செய்தி வெளியாகிய நிலையில், மறுநாள் சுகாதாரத் திணைக்களத்தை சேர்ந்த வைத்திய அதிகாரிகள், சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் குறித்த நபரை கொவிட் சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டு செல்ல முயற்சித்த போது தொற்றில் உள்ளவர்களை வீட்டில் வைத்து சிகிச்சை செய்ய முடியும் என்ற சுற்று நிருபத்தை காட்டி அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தார்.

இதன்போது மருத்து–வர்கள் அவரை வீட்டில் வைத்து சிகிச்சையளிப்பதற்கான சுற்று நிருபத்துக்கு அமைவாக அவரது உடல் நிலை உள்ளதா என பரிசோதித்த போது குறித்த தொற்றாளருக்கு சீனியின் அளவு 9.8 மில்லிகிராம் காணப்பட்டதுடன், உடலில் ஒட்சிசனின் அளவும் குறைவாக இருந்துள்ளது.அத்துடன் நெஞ்சுப் பகுதியில் சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சுற்று நிருபத்துக்கு அமைவாக இவ்வாறான நபரை வீட்டில் வைத்து சிகிச்சையளிக்க முடியாது. இதனால் தொற்றாளருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் எனக் கருதிய சுகாதாரப் பிரிவினர், அவரை சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டு செல்ல முயசித்தனர். அவர் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

அத்துடன், தன்னை சிகிச்சை நிலையத்துக்கு கொண்டு செல்ல சுகாதாரப் பிரிவினர் மிரட்டினர் என ஒன்லைன் மூலம் வவுனியா பொலிஸில் தொற்றாளர் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பொலிஸாருக்கு விளக்கமளித்திருந்தமையுடன், தமது கடமைக்கு இடையூறை ஏற்படுத்தினார் என சுகாதார வைத்திய அதிகாரிகளால்குறித்தஹோட்டல் உரிமையாளருக்கு எதிராக பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் நீதிமன்றில் ஹோட்டல் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

வவுனியாவில் கொவிட் தொற்று அதிகரித்து வரும் நிலையில், சுகாதாரப் பிரிவினரின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்காது சமூக பொறுப்புள்ள ஒருவர் செயற்பட்டமை தொடர்பாகப் பலரும் அதிருப்திவெளியிட்டுள்ளமையுடன், வட மாகாணத்தில் வீட்டில் வைத்து சிகிச்சை அளிக்கும் நடைமுறை 15 ஆம் திகதி முதலே நடைமுறைக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவால் பாதிக்கப்படாத மக்களை எப்படி வாழவைப்பது?

## இப்படிச் சிந்திக்கிறதாம் அரசு



நாட்டை முடக்குவதென்பது ஜனாதிபதி ஒரு நாளில் சில நிமிடங்களுக்குள் எடுக்கக்கூடிய தீர்மானம் என்றும் ஆனால், கொரோனாவால் பாதிக்கப்படாத மக்களை எப்படி வாழ வைப்பது என ஓர் அரசாங்கமாக தாம் சிந்திக்க வேண்டும் என அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

புறக்கோட்டையில் வர்த்தக நடவடிக்கைகளை கண்காணித்த வர்த்தக அமைச்சரிடம், கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வாக அரசாங்கம் நாட்டை முடக்காதிருப்பது ஏன் என ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர்.

இதற்கு பதில் வழங்கும்போதே அமைச்சர் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

நாட்டை முடக்குவதென்பது ஜனாதிபதி ஒரு நாளில் சில நிமிடங்களுக்குள் எடுக்கக்கூடிய தீர்மானம் என்றும் ஆனால், கொரோனாவால் பாதிக்கப்படாத மக்களை எப்படி வாழ வைப்பது என ஓர் அரசாங்கமாக தாம் சிந்திக்க வேண்டும் என அமைச்சர் குறிப்பிட்டார். நாடு முடக்கப்பட்டால் பருப்பு, கடலை, கிழங்கு மற்றும் வெங்காயம் போன்றவற்றை தொடர்ச்சியாக இறக்குமதி செய்வதில் இடையூறு ஏற்படும் எனவும் இதனால் நாட்டில் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# கொழும்பு நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்களை மூடுமாறு மேயர் ரோஸி சேனநாயக்க வலியுறுத்தல்

நாட்டில் சடுதியாக அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக கொழும்பு நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்களை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் ஊடக அறிக்கையொன்றினையும் நேற்று (வியாழக்கிழமை) வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் ரோஸி சேனாநாயக்க கூறியுள்ளவை வருமாறு –

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக கொழும்பு நகரத்திலுள்ள அனைத்து வர்த்தக நிறுவனங்களையும் சில நாள்களுக்கு மூட வேண்டும்.

இதனூடாக கொழும்பு நகரத்தில், கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

மேலும் வர்த்தக சங்கங்கள் ஒன்றிணைந்து, வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கதோர் விடயமாகும்.

இதேவேளை 2022 ஜனவரிக்குள் 30 ஆயிரம் பேர் வரை கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பர் என்ற உலக சுகாதார அமைப்பின் எச்சரிக்கையை கவனத்தில் கொள்ள வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.08.2021இல் வெளியிடப்பெற்றது.